www.Padasalai.Net www.CBSEtips.in

HTJ

# அரையாண்டுத் தேர்வு - 2022

9 - ஆம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். அ) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** **15 X 1 = 15**

1. ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
- இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
(அ) கேட்டல் (ஆ) காணல் (இ) நுகர்தல் (ஈ) தொடுஉணர்வு
2. திருநாதர் குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை
(அ) தெய்வ உருவங்கள் (ஆ) விலங்கு உருவங்கள்
(இ) தீர்த்தங்கரர் உருவங்கள் (ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்
3. மிசை - என்பதன் எதிர்ச்சொல் என்ன? (அ) இசை (ஆ) கீழே (இ) மேலே (ஈ) வசை
4. சிந்தாமணி - என்பதன் இலக்கணக்குறிப்பு. (அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
(ஆ) பண்புத்தொகை (இ) வேற்றுமைத்தொகை (ஈ) வினைத்தொகை
5. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?
(அ) மடிவு - தொடக்கம் (ஆ) வருக்கை - இருக்கை (இ) அள்ளல்-சேறு (ஈ) புள் - தாவரம்
6. ஐம்பெருங்குழு எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்.
(அ) வடசொற்கள் (ஆ) தொகைச்சொற்கள் (இ) திசைச்சொற்கள் (ஈ) வரிச்சொற்கள்
7. பாடவேளை என்பது ............. புணர்ச்சி
(அ) கெடுதல் (ஆ) இயல்பு (இ) தோன்றல் (ஈ) திரிதல்
8. தீரா இடும்பை தருவது எது?
(அ) குணம், குற்றம் (ஆ) நாடாமை, பேணாமை (இ) பெருமை, சிறுமை (ஈ) ஆராயாமை, ஐயப்படுதல்
9. மொய்ம்பு - இச்சொல்லின் பொருள் (அ) கூறு (ஆ) வலிமை (இ) சொல் (ஈ) பகை
10. தமிழ்விடுதூது என்னும், இலக்கிய வகையைச் சேர்ந்தது.
(அ) தனிப்பாடல் (ஆ) சிற்றிலக்கியம் (இ) தொடர்நிலைச்செய்யுள் ஈ) புதுக் கவிதை
11. சொற்றொடர்களை முறைப்படுத்துக.
(அ) ஏறுதழுவுதல் என்பதை (ஆ) தமிழ் அகராதி (இ) தழுவிப்பிடித்தல் என்கிறது.
1) ஆ-அ-இ 2) ஆ-இ-அ 3) இ-அ-ஆ 4) இ-ஆ-அ
12. **பாடலைப்படித்து வினாக்களுக்கு விடை தருக.**
*பூவையும் குயில்களும் பொலங்கை வண்டரும்*
*பாஇசை பாடமுப் ப்ழமும் தேனும்தந்*
*தேஇசை பெறும்கடலு இடையர் முக்குழல்*
*ஆவினம் ஒருங்குற அருகுஅ ணைக்குமால்*
இப்பாடல் இடம்பெற்ற நூல்
(அ) சீவகசிந்தாமணி (ஆ) மதுரைக்காஞ்சி (இ) இராவண காவியம் (ஈ) முத்தொள்ளாயிரம்
13. பொலம் - பொருள் கூறுக. (அ) அழகு (ஆ) காடு (இ) மூங்கில் (ஈ) பறவை
14. ஆவினம் - பிரித்து எழுதுக. (அ) ஆடு + இனம் (ஆ) ஆ + வினம் (இ) ஆவ் + வினம் (ஈ) ஆ+இனம்
15. இப்பாடலின் ஆசிரியர்
(அ) திருத்தக்கதேவர் (ஆ) புலவர் குழந்தை (இ) அறியப்படவில்லை (ஈ) மாங்குடி மருதனார்

### பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

**பிரிவு- 1- எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **4 X 2 = 8**
**வினா எண்: 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
அ) திருமாலை வழிபட்டுச்சிறப்பு நிலை எய்திய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர்.
ஆ) பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் பிறந்தவர்.
17. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

18. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.
19. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?
20. மதுரைக்காஞ்சி - பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.
21. மிகுதியான் எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு- 2 எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **5 X 2 = 10**

22. பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.
23. பாய்வன - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
24. பொருள் எழுதித் தொடரமைக்க. அ) பரவை, பறவை.
25. மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக. அ) அணில் பழம் சாப்பிட்டது. ஆ) தென்றல் காற்று அடித்தது.
26. கலைச்சொல் தருக. அ) பேரகராதி ஆ) நடுகல்
27. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
28. பொருள் கூறுக. அ) இசைவு ஆ) கம்புள்

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18) பிரிவு- 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 X 3 = 6**

29. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
30. சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.
31. கைபிடி, கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

**பிரிவு- 2 இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 X 3 = 6**

**வினா எண்: 34-க்கு கட்டாயமாக விடையளிக்க.**

32. அறிவையும் உயிர்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?
33. ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாக திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?
34. அ) அள்ளல் எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரம் பாடல். *(அல்லது)*
ஆ) காடெல்லாம் எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்.

**பிரிவு- 3 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 X 3 = 6**

35. சொற்பொருள் பின்வரு நிலையணியை விளக்குக.
36. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?
37. மரபு இணைச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) முதலும் முடிவும் ஆ) கண்ணும் கருத்தும் இ) பேரும் புகழும்

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5 X 5 = 25**

38. அ) ஏமாங்கத நாட்டின் வளம் குறித்து விவரிக்க. *(அல்லது)*
ஆ) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.
39. அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.
*(அல்லது)* ஆ) விமான நிலையத்தில் நான் - கற்பனையாகக் கதை ஒன்றினை எழுதுக.



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.
41. பள்ளியிலும், வீட்டிலும் உன் பொறுப்புகளைப் பட்டியலிடுக.
42. கல்வி குறித்த சிறப்புத் தொடர்கள், பொன்மொழிகளைத் திரட்டி எழுதுக.

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3 X 8 = 24**

43. அ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்து செய்திகளை விவரிக்க. *(அல்லது)* ஆ) நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை சான்றுடன் விவரிக்க.
44. அ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை - என்பதை செய்தி கதையின் மூலமாக விளக்குக.
*(அல்லது)* ஆ) எங்கள் ஊர்ச்சந்தை - என்னும் தலைப்பில் நாளிதழ் செய்தி ஒன்றை எழுதுக.
45. அ) எனது பயணம் என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக. *(அல்லது)*
ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் திருக்குறள் - எளிய உரை என்னும் நூலின் ஐம்பது படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு முல்லை பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
Scanned by CamScanner

அரையாண்டுத் தேர்வு - தஞ்சாவூர் மாவட்டம்

9 ஆம் வகுப்பு - தமிழ் விடைக்குறிப்பு

1) தொடு உணர்வு

2) தீர்த்தங்கரர் உருவங்கள்

3) கீழே

4) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

5) அள்ளல் - சேறு

6) தொகைச்சொற்கள்

7) கெடுதல்

8) ஆராயாமை - ஐயப்படுதல்

9) வலிமை

10) சிற்றிலக்கியம்

11) 1) ஆ- அ- இ

12) இராவண காவியம்

13) அழகு

14) ஆ+ இனம்

15) புலவர் குழந்தை

16) அ - திருமாலை வழிபட்டுச் சிறப்பு நிலை எய்திய ஆழ்வார்கள் எத்தனை பேர் ?

ஆ- பரஞ்சோதி முனிவர் பிறந்த ஊர் எது ?

17) உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார்.

18) வேற்றுமைத் தொகை, விளித்தொடர்

19) பாலை நிலத்தில் சிறுவர்கள் பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு கோலினால் அடித்து விளையாடினர். இவ்வோசையைக் கேட்ட பருந்துகள் பறந்தன.

www.Padasalai.Net

20) பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. பத்துப்பாட்டில் அடியளவில் பெரிய நூல். மதுரையைச் சிறப்பித்துக் கூறும் நூல்

21) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்

தகுதியான் வென்று விடல்.

22) பட்டிமண்டபம் என்பதுதான் இலக்கியவழக்கு. ஆனால் இன்று நடைமுறையில் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள். பேச்சுவழக்கையும் ஏற்கலாம்.

23) பாய் + வ்+ அன்+ அ

பாய் - பகுதி , வ் - எதிர்கால இடைநிலை, அன் - சாரியை, அ- பலவின்பால் வினைமுற்று விகுதி.

24) பரவை - கடல் , பறவை - பறவையினம் - கடலின் மேற்பரப்பில் பறவைகள் பறந்தன.

25) அ. அணில் பழம் தின்றது. ஆ. தென்றல் காற்று வீசியது.

26) அ- Lexicon ஆ - Hero Stone

27) ஆறு. பகுதி, விகுதி, சந்தி, சாரியை, விகாரம்,இடைநிலை

28) அ) விருப்பம் ஆ) பறவை

29) மழைக்காலங்களில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரன ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழிமுகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவர். மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும். கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும்.

30) ஔவையார், ஒக்கூர் மாசாத்தனார், ஆதிமந்தியார், வெண்ணிக்குயத்தியார், பொன்முடியார், நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப் பாடினியார், வெள்ளிவீதியார்

31) கை பிடி" – கையைப் பிடித்துக் கொள் என்று பொருள்.

"கைப்பிடி" – கைப்பிடி அளவைக் குறிப்பது. (ஒரு கைப்பிடி பருப்பு கொடு)

கை + பிடி → கைபிடி – இயல்புப் புணர்ச்சி ஆகும்.

கை + பிடி → கைப்பிடி (தோன்றல்) - விகாரப்புணர்ச்சி ஆகும்.

www.Padasalai.Net www.CBSEtips.in

32) புல், மரம் ஆகியன ஓரறிவு உயிர்கள் (தொடு உணர்வு)

சிப்பி, நத்தை ஆகியன ஈரறிவு உயிர்கள் (தொடு உணர்வு+நுகர்தல்)கரையான், எறும்பு ஆகிய மூவறிவு உயிர்கள் (தொடு உணர்வு+சுவை+நுகர்தல்)

நண்டு, தும்பி ஆகியன நான்கறிவு உயிர்கள் (தொடு உணர்வு+சுவை+நுகர்தல்+காணல்)

பறவை, விலங்கு ஆகியன ஐந்தறிவு உயிர்கள் (தொடு உணர்வு+சுவை+நுகர்தல்+காணல்+கேட்டல்)

மனிதன் ஆறறிவு உயிர்கள் (தொடு உணர்வு+சுவை+நுகர்தல்+காணல்+கேட்டல்+பகுத்தறிவு)

33) ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில் நாள்தோறும் ஆயிரம் வகையான உணவுகள் கிடைக்கின்றன.உணவளிக்கும் அறச்சாலைகளும் ஆயிரம் இருக்கின்றன. ஆயிரங்காலத்துப் பயிராம் திருமண மண்டபங்களிலும், திருமண வீடுகளிலும் அலங்காரத் தூண் இருபுறமும் பந்தலில் கட்டி அலங்காரம் செய்து வண்ண வண்ண விளக்குகளும், தோரணங்களும் அமைகின்றன.யாரிடமும் எதற்கும் கையேந்தாது தாமே உழைத்துத் தாமும் உண்டுதமிழகமெங்கும் உண்ண வாரி வழங்கும் வள்ளல்கள் இங்குண்டு அங்கே மகளிர் ஒப்பனை செய்துகொள்ள மணிமாடங்கள் ஆயிரம் இருக்கின்றன. மேலும் செய் தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரம்பேர் உள்ளனர்

34) அ. அள்ளற் பழனத் தரக்காம்பல் வாய்அவிழ

வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப் – புள்ளினம்தங்

கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ

நச்சிலைவேற் கோக்கோதை நாடு.

ஆ. காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு

மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை

கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல் அன்ன

நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்.

35) சொற்பொருள் பின்வருநிலையணி என்பது செய்யுளில் முன்னர் வந்த சொல் அதே பொருளில் பல முறை வருவது.

எ.கா: "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்

பொய்யா விளக்கே விளக்கு.[4]"

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

அணிப் பொருத்தம்: இக்குறட்பாவில் விளக்கு என்னும் சொல் ஒரே பொருளில் பல முறை வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி .

36) இக்குறளில் பயின்று வரும் அணி - ஏகதேச உருவக அணி.

செயலை உரைக்கல் லோடு உருவகப்படுத்திய வள்ளுவர் பெருமைகளையும் சிறுமைகளையும் உருவகப்படுத்த வில்லை இவ்வாறு ஒன்றை உருவகப்படுத்தி விட்டு மற்றொன்றை உபயோகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி

37) அ) முதலும் முடிவும்: இது போன்ற தவறுகள் முதலும் முடிவும் ஆக இருக்கட்டும் என்று ஆசிரியர் அவர்களிருவரையும் எச்சரித்தார்.

ஆ) கண்ணும் கருத்தும்: தமிழ் கண்ணும் கருத்துமாகப் படித்துத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றான்.

இ) ஆரிப் சொன்னதில் நம்பிக்கை இல்லாமல் குமார் மேலும் கீழும் பார்த்தான்.

38) அ)

தென்னை மரத்திலிருந்து முற்றிய தேங்காய் விழுகின்றது. அத்தேங்காய் நிலத்தை வந்தடையும்முன் விழும்வேகத்தில் அருகிருந்த பாக்கு மரத்தின் உச்சியின் உள்ள தேனடையைக் கிழித்து, தேனடையோடு பலாமரத்தில் உள்ள பலாப்பழத்தினை பிளந்து, தேங்காய், தேனடை, பலாச்சுளைகளோடு, வாழைப்பழங்களையும் உதிரச்செய்கிறது. இவ்வாறு ஏமாங்கத நாட்டை போலவே எம் ஊரும் முக்கனி வளமும், தென்னை மரங்களும், பாக்கு மரங்களும் நிறைந்தனவாய்க் காணப்படுகின்றது.

மண்வீசும் வயல்வளம்:

, நீர்நிலைகள் சூழ்ந்த வயல் பகுதிகள் உள்ளன. அந்நீர்நிலைகளில் அழகான கொம்புகளையுடைய ஆண் எருமைகளும், வலிமையான நேரிய கொம்புகளை உடைய எருதுகளும் பேரொலி எழுப்பி நீந்துகின்றன. அவ்வொலியால் அந்நீர்நிலையில் உள்ள பொறிகளையுடைய வரால் மீன் இனங்கள் கலைந்து ஓடுகின்றன. இவ்வாறு எருமைகளும், எருதுகளும், நீரைக் கலக்குவதாலும், சேறுமணமும், நீந்தும் மீன் மணமும் கலந்த வயல்பகுதிகளில் வெள்ளமென உழவர்கள் உழுதிருந்தனர்.

இறைஞ்சி வணங்கும் நெற்பயிர்கள்

கருக்கொண்ட பச்சைப்பாம்பைப்போல நெற்பயிர்கள் திரட்சியான தோற்றம் கொண்டுள்ளன. செல்வம் பெற்று பக்குவம் இல்லாது செருக்குடன் இருக்கும் மேல் அல்லார் போல, கதிர்விட்டு நிமிர்ந்துநிற்கின்றன நெற்பயிர்கள்.அப்பயிர்களில் உள்ள நெற்கதிர்கள் முற்றியவுடன், தெளிந்த நூல் பல கற்றோரின் பணிவைப்போல பணிந்து, இறைஞ்சி தலைசாய்ந்து நிற்கும் கவின் மிகு காட்சி.

ஆ)

ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகள்:-

தோரணம் கட்டுதல், தெருக்களையும், கோவில் மண்டபங்களையும் தூய்மைப்படுத்தி வண்ணம் அடித்தல், கோலமிடுதல் போன்றவற்றை செய்தனர்.பனையோலை, மாவிலை தோரணங்களை கட்டுவர். வாழை மரங்களை கட்டி வைப்பர்.நாடகம், இசைக்கச்சேரி, பட்டிமன்றம் ஆகியவை நடக்க ஏற்பாடு செய்வர்.

இந்திரவிழா நிகழ்வுகள்:-

தெருக்கள், மன்றங்கள் ஆகியவற்றில் அழகுப் பொருட்கள் பலவற்றை அழகுபடுத்தினர்.பாக்கு, வாழை, வஞ்சிக் கொடி, பூங்கொடி, கரும்பு ஆகியவற்றை நட்டு வைத்தனர்.தெருக்கள், மன்றங்கள் ஆகியவற்றில் புது மணலைப் பரப்பினர். பட்டிமண்டபத்தில் வாதிட ஏற்பாடு செய்திருந்தனர்.

39) அ. பொருத்தமான தொகுப்புரை வழங்கியிருப்பின் மதிப்பெண்

40) பொருத்தமான கவிதை இருப்பின் மதிப்பெண் வழங்குக.

41) பள்ளியில் ,

ஆசிரியர்களிடம் அன்புடனும் மாரியாதையுடனும் நடந்துகொள்வேன். பள்ளி, வகுப்பறையைத் தூய்மையாக வைத்திருப்பேன். சக மாணவர்களிடம் நட்புடன் பழகுவேன்.

வீட்டில் ,

தாய், தந்தைக்கு உதவுவேன். பாடங்களைப் படிப்பேன். மாலையில் விளையாடுவேன்.

42) கல்வியே அழியாச் செல்வம், கற்க கசடற, கற்றோரே சிறந்தவர், ஒருமைக்கண் கற்ற கல்வி எழுபிறப்பும் வரும், கல்விச் செல்வமே செல்வம். முதலிய பல.

48) அ-

மூவலூர் இராமாமிர்தம்:-

தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர் திராவிட இ யக்க அரசியல் செயல்பாட்டாளர். தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணைநின்றவர். தமிழக அரசு, 8 ஆம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கிவருகிறது.

முத்துலெட்சுமி:-

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி. தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தவர் அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952 இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

நீலாம்பிகை அம்மையார்:-

மறைமலையடிகளின் மகள் ஆவார். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர் இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் – தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

ஆ)

நீர்இன்று அமையாது உலகு என்னும் தம் கருத்தை வள்ளுவர் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். மனித வாழ்வின் அடித்தளம் நீரே! மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க் கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகிறது.

மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது. நிலமும், மரமும், உயிர்களும் நோயின்றி வாழ நீரே அவசியம். உடலை குளரிவிப்பதற்கும், சாமியாடிகளுக்கு மஞ்சள் நீர் கொடுப்பதும், திருமணமான பின் கடலாடுதலும், இறப்பு சடங்கிலும், வீட்டிற்கு வரும் விருந்தினர்களை நீர் கொடுத்து வரேவற்பதற்கும், விவசாய நிலத்திற்கு உழைக்கச் செல்வோர் குடிப்பதும் என அனைத்து செயல்களுக்கும் நீரே அவசியம். அதனால் தான் வள்ளுவர் “நீர்இன்று அமையாது உலகு” என்று அழுத்தமாக சொல்லியிருக்கிறார்.

44) அ - ஆ

பொருத்தமான விடையிருப்பின் மதிப்பெண்

45) அ- பொருத்தமான விடையிருப்பின் மதிப்பெண்

ஆ)

விடுநர் ,

அஅஅஅ

9 ஆம் வகுப்பு, 'அ' பிரிவு,

அரசு மேல்நிலைப்பள்ளி,

கும்பகோணம்.

பெறுநர்

மேலாளர்,

நெய்தல் பதிப்பகம்,

சென்னை 600 001.

பெருந்தகையீர்,

வணக்கம். உலகிலேயே பழம்பெருமை வாய்ந்த மொழிகளுள் முதல் மொழியாகவும், முதன்மை மொழியாகவும், செம்மொழியாகவும் விளங்குது தமிழ்மொழியே. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தேமுன்தோன்றிய மூத்தமொழி தமிழ் என்று சான்றோர் போற்றிப் புகழ்வர். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்துவரும் தமிழ்மொழியில் உள்ள அருஞ்சொற்களின் பொருளை அறிய, உங்கள் பதிப்பகத்தில் வெளியிட்டுள்ள திருக்குறள் எளிய உரை ஐம்பதுப்படிகளை எங்கள் பள்ளி நூலகத்திற்குப் பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

உறைமேல் முகவரி :

மேலாளர்,

நெய்தல் பதிப்பகம்,

சென்னை.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன், பட்டதாரி ஆசிரியர்,

தி.ஆ.மேனிலைப்பள்ளி, திருவிடைமருதூர்

செல் - 9443740120

www.Padasalai.Net

www.Padasalai.Net